


PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY

சென்னை மலர்: 01 இதழ்: 107 29.11.2025 சனிக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 107 | Saturday | pages 8 | Rs.5/-

LOCAL NEWS ,EVENTS & ADS - JOB, PROPERTY, HOUSEHOLD, EDUCATION - CHENNAI

# நாங்கள் தற்குறி அல்ல; ஆச்சர்யக்குறி என்கிறார் விஜய்

'நாங்கள் தற்குறி அல்ல; ஆச்சர்யக்குறி. மாற்றத்துக்கான அறிகுறி," என காஞ்சிபுரத்தில் நடந்த மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் தவெக தலைவரும், நடிகருமான விஜய் பேசினார்.

காஞ்சிபுரத்தில் மக்கள் சந்திப்பு நிகழ்ச்சியில் விஜய் பேசியதாவது:

இந்த விஜய் சும்மா ஏதும் சொல்ல மாட்டான். ஒன்று சொன்னால் அதை செய்யாம விடமாட்டான். அது மக்களுக்கு நன்றாக தெரியும். ஏன்டா இந்த விஜயை தொட்டோம், ஏன்டா விஜய் கூட இருக்கும் அந்த மக்களை தொட்டோம், நினைச்சி, நினைச்சி வருத்தப்படப்போகிறீர்கள்.



யாரைப்பார்த்து தற்குறி என்கிறீர்கள்? இந்த தற்குறிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து தான் உங்கள் அரசியலை கேள்விக்குறி ஆக்கப்போகின்றனர். அவர்கள் தற்குறி அல்ல, ஆச்சர்யக்குறிகள்.

மாற்றத்துக்கான அறிகுறி. தற்குறிகள் எல்லாம் ஒன்று சேர்ந்து, வாழ்நாள் முழுவதும் விடையே கண்டுபிடிக்க முடியாத அளவுக்கு உங்கள் அரசியலேயே கேள்விக்குறியாக்க போகிறார்கள்,

ஆல்ரெடி தேர்வு செய்தாச்சு, நம்பிக்கையுடன் இருங்கள், வெற்றி நிச்சயம்.

# அதிமேதாவித்தன அரசியல்; இபிஎஸ் பற்றி முதல்வர் ஸ்டாலின் விமர்சனம்

இபிஎஸ் அதிமேதாவித்தன அரசியல் செய்தார். அவர் பச்சைத்துண்டு போட்டு பச்சைத் துரோகம் செய்தார் என முதல்வர் ஸ்டாலின் விமர்சனம் செய்துள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கை: டெல்டா விவசாயிகளின் கண்ணீர் துடைக்கத் துணை நிற்காமல், நீலிக்கண்ணீர் வடித்த பச்சைத் துரோகிகள் எங்கே? நீர்நிலைகள் நிறைந்து, உழவர்கள் கடும் உழைப்பைச் செலுத்தி நெடுவயல் நிறையக் கண்டபோது, கொள்முதல் நிலையங்களை அதிகரித்து நாம் காத்திருந்தோம். ஆனால், அதிகப்படியான மழைப்பொழிவால், நெல்மணிகள் ஈரமாயின. உடனே,



'சாகுபடிக் காலத்திற்கு முன்னதாகவே ஏன் அறுவடை செய்யவில்லை?' என்றெல்லாம் அதிமேதாவித்தன அரசியல் செய்தார். பச்சைத்துண்டு போட்டு பச்சைத் துரோகம் செய்தவர் எதிர்க்கட்சித் தலைவர் இபிஎஸ்.






# வளரும் வணிகம்

## வருகிற ஓராண்டுக்குள் ஒரு சவரன் ரூ.1.75 லட்சம் ஆகுமா?



கடந்த சில மாதங்களாகவே தங்கம் விலை தொடர்ந்து ஏற்ற இறக்கத்துடன் இருக்கும் நிலையில், வருகிற ஒரு ஆண்டுக்குள் ஒரு சவரன் தங்கம் விலை ரூ.1.74 லட்சம் வரை உயரக்கூடும் என்ற கணிப்புகள் வெளிவந்துள்ளன. இதனால் தங்க நகை தயாரிப்பு துறை கடும் பாதிப்புக்குள்ளாகும் என்பதால், தங்கத்தின் மீதான இறக்குமதி வரி மற்றும் ஜிஎஸ்டி வரியும் குறைக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

கொரோனா தொற்று பரவலுக்குப் பிறகு உலகளவில் தங்கம் விலை இடைவிடாது உயர்ந்துவருகிறது. கடந்த சில மாதங்களில் குறிப்பாக அக்டோபரில் தான் தங்கத்தின் விலை இதுவரை இல்லாத வகையில் சாதனை உயர்வை தொட்டது என்றே சொல்லலாம்.

கடந்த ஜனவரி 1ஆம் தேதி அன்று ஒரு சவரன் தங்கம் ரூ.57,000 என இருந்த நிலையில், கடந்த மாதம் 17ஆம் தேதி அது ரூ.97,000 வரை சென்றது. இதன்பிறகு கடந்த சில நாட்களாக தங்க விலை சரிவடைந்து வந்தாலும், திடீர் ஏற்றமும் இறக்கமுமாக சந்தை குழப்பத்தை ஏற்படுத்தி வருகிறது.

தங்கத்தின் எதிர்காலத்தில் தங்கத்தின் விலை உயர்ந்து கொண்டே போகும் என்ற கணிப்புகள் சொல்வதால், பலரும் தங்கத்தை முதலீடாக வாங்கலாமா என குழப்பத்தில் உள்ளனர்.

மேலும், பெண்களின் திருமணம், குழந்தை பிறப்பு போன்ற முக்கிய நிகழ்வுகளிலும், வீட்டில் பணத் தேவைக்குப் பயன்படுத்தப்படும் பாதுகாப்பான முதலீடாகவும் தங்கம் நீண்டகாலமாக இருந்து வருகிறது. ஆனால் விலை அதிகரிப்பால், முந்தைய காலத்தில் ஒரு பவுன் தங்கம் வாங்கிய விலைக்கு தற்போது அதன் பாதிக்கும் குறைவான அளவே வாங்க முடிகிறது.

இந்நிலையில், அடுத்த ஆண்டுக்குள் ஒரு சவரன் தங்கம் விலை ரூ.1.74 லட்சம் வரை உயரக்கூடும் என்பதால் வரிக்குறைப்பு செய்ய வேண்டுமென்ற கோரிக்கை எழுந்துள்ளது. இதுதொடர்பாக பேசியுள்ள நகை வியாபாரிகள், கடந்த வியாழக்கிழமை ஒரு சவரன் தங்கம் ரூ.93,840 என இருந்தது. சனிக்கிழமை அது ரூ.91,840 ஆகவும், நேற்று அது மேலும் குறைந்து ரூ.91,680 ஆகவும் விற்பனையானது. விலை குறைந்தாலும், வருகிற நாட்களில் தங்கத்தில் மேலும் பெரிய உயர்வு ஏற்படும் வாய்ப்பு இருப்பதாக வல்லுநர்கள் கணித்துள்ளனர்.

ஒரு டிராய் அவுன்ஸ் தங்கத்தின் விலை 6,500 அமெரிக்க டாலர் வரை உயரலாம். இது இந்திய ரூபாயில் கணக்கிட்டால், ஒரு சவரன் தங்கம் ரூ.1.74 லட்சம் வரை உயரும் நிலை உருவாகும். அடுத்த 12 மாதங்களில் இந்த உயர்வு நடைபெறும் எனவும் அமெரிக்க நிதி நிபுணர்கள் கூறுகின்றனர். இந்நிலையில், தங்கத்தின் மீது தற்போது விதிக்கப்பட்டுள்ள 6% இறக்குமதி வரியை 2% ஆகவும், ஜிஎஸ்டி 3% வரியை 1.5% ஆகவும் குறைக்க வேண்டும் என கோவை மற்றும் நாடு முழுவதும் உள்ள தங்க நகை சங்கங்கள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகின்றன. தங்க விலை உயர்வால் நகை தயாரிப்புத் துறை கடுமையாகப் பாதிக்கப்படுவதுடன், வாடிக்கையாளர்கள் தங்கத்தை வாங்குவதிலிருந்து பின்வாங்கும் சூழல்கள் உருவாகி உள்ளன என்பதே இவர்களின் வாதம்.

## டிஜிட்டல் தங்கம் வாங்குவது ஆபத்து!




முதலீட்டு ஆலோசகர் அபிஷேக் குமார் கூறுகையில், "இதன் மூலம் டிஜிட்டல் தங்க செயலிகளின் செபியின் கட்டுப்பாட்டில் இல்லை என்பதைச் செபி தெளிவுபடுத்துகிறது. ஏதேனும் சிக்கல் ஏற்பட்டால், முதலீட்டாளர்களுக்கு செபியின் பாதுகாப்பு கிடைக்காது. டிஜிட்டல் தங்க தளங்களுக்கு எந்தவித ஒழுங்குமுறை மேற்பார்வையும் இல்லை. இதனால் முதலீட்டாளர்கள் இந்தத் தளங்களின் நம்பகத்தன்மையை மதிப்பிடுவது கடினம். இதனால் மக்கள் தங்கள் பணத்தை இழக்கும் அபாயம் இருக்கவே செய்கிறது" என்றார்.

## 50 நாள் வட்டியில்லா கடன்!




கிரெடிட் கார்டுகளை பொறுத்தவரை 50 நாட்கள் வட்டியில்லா கடன் என்று சொல்லாம். நீங்கள் ஒன்றாம் தேதி வாங்கிய கடனை வட்டியே இல்லாமல் அடுத்த மாதம் 20ம் தேதிக்குள் திரும்ப செலுத்தவேண்டும். ஒன்றாம் தேதி முதல் 30ம் தேதிக்குள் வாங்கிய கடனை, அடுத்த மாதம் 20ம் தேதிக்குள் கட்டுவதாக இருக்கும். ஒரு சில வங்கிகள் இந்த தேதியை மட்டும் மாற்றி இருக்கும். ஒருவேளை குறிப்பிட்ட தேதியில் கடனை கட்ட முடியவில்லை என்றால் தான் 3.5 சதவீதம் வட்டி அதற்கு கட்ட வேண்டியதிருக்கும். இது தான் வங்கிகளுக்கு பணம் கொட்டும் விஷயமாக இருக்கிறது.


















## சினி.. துளி...

### மீண்டும் இணையும் தனுஷ் சாய் பல்லவி ஜோடி?

❍ தனுஷ் நடிக்கவுள்ள புதிய படத்தில் நாயகியாக நடிக்க சாய் பல்லவியிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது. தனுஷ் சாய் பல்லவி ஜோடி இணைந்து 'மாரி 2' படத்தில் பணிபுரிந்துள்ளது. இவர்கள் இணைந்து நடனமாடிய 'ரவுடி பேபி' பாடல் இப்போதும் பிரபலம் என்பது குறிப்பிடத்தக்கது. அந்தப் படத்துக்குப் பிறகு தனுஷ் சாய் பல்லவி ஜோடி இணைந்து நடிக்கும் படமாக இது அமையும் என தெரிகிறது.

❍ கூடைப்பந்து விளையாட்டுக் களத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள வெப் தொடர், 'நடு சென்டர்'. இதில் விஜய் சேதுபதி மகன் சூர்யா, சூர்யா எஸ்.கே, சாரா பிளாக், டெரன்ஸ், முகேஷ், டோம், யஷ்வந்த், சஹானா, மதுவசந்த், ஆஷா சரத் ஆகியோருடன் சசிகுமார், கலையரசன் நடித்துள்ளனர். இதை, நரு நாராயணன் இயக்கியுள்ளார். ஹெஸ்டின் ஒளிப்பதிவு செய்துள்ள இத்தொடருக்கு விஷால் சந்திரசேகர் இசை அமைத்துள்ளார். நவ.20-ம் தேதி முதல் ஜியோ ஹாட் ஸ்டார் தளத்தில் ஒளிபரப்பாகிறது.

## ராஜமவுலியின் 'வாரணாசி' பட தலைப்புக்கு சிக்கல்!




ராஜமவுலி இயக்கத்தில் உருவாகி வரும் 'வாரணாசி' படத்தின் தலைப்புக்கு சிக்கல் எழுந்துள்ளது.

எஸ்.எஸ்.ராஜமவுலி இயக்கத்தில் மகேஷ் பாபு நடிக்கும் படம் 'வாரணாசி'. இந்த படத்தின் தலைப்பையும் அது தொடர்பான அறிமுக டீசரையும் படக்குழு அண்மையில் குளோப்டிரோட்டர் என்ற பிரம்மாண்ட நிகழ்வில் வெளியிட்டது. இதனையடுத்து இந்த டீசர் சமூகவலைதளங்களில் வைரலானது.

இந்த நிகழ்வில் அனுமன் குறித்து ராஜமவுலி பேசியது சர்ச்சையாகி அவர் மீது ஹைதராபாத் காவல்துறையில் புகாரளிக்கப்பட்ட நிலையில், தற்போது 'வாரணாசி' படத்துக்கு புதிய சிக்கல் ஒன்று எழுந்துள்ளது. இந்த தலைப்பை கடந்த 2023ஆம் ஆண்டே ராமா பிரம்மா ஹனுமா கிரியேஷன்ஸ் என்ற நிறுவனம் பதிவு செய்து வைத்துள்ளது. இது தொடர்பான கடிதம் தற்போது வைரலாக பரவி வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு பதிவு செய்யப்பட்ட இந்த தலைப்பை கடந்த ஜூன் மீண்டும் அந்த நிறுவனம் புதுப்பித்துள்ளது. இது அடுத்த ஆண்டு ஜூலை வரை நீடிக்கும். எனினும் ராஜமவுலி படத்தின் தலைப்புக்கு ஆங்கிலத்தில் வேறு ஸ்பெல்லிங் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த தலைப்பு தொடர்பாக ராஜமவுலி படக்குழு, சம்பந்தப்பட்ட நிறுவனத்தை அணுகினார்களா என்பது குறித்த தகவல் எதுவும் இல்லை. ஏற்கெனவே இந்து அமைப்புகள் ராஜமவுலி மீது புகாரளித்த சர்ச்சை இன்னும் ஓயாத நிலையில், மீண்டும் ஒரு புதிய சிக்கல் உருவாகியிருப்பது படக்குழுவுக்கு தலைவலியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிகிறது.

## சினிமா...சினிமா




## எடை குறைப்பு அனுபவம் பகிர்ந்த நடிகை கிரேஸ் ஆண்டனி

தமிழ், மலையாள திரைப்படங்களில் நடித்து வரும் நடிகை கிரேஸ் ஆண்டனி, தனது உடல் எடையை குறைத்துள்ளார்.

கடந்த 2016-ல் 'ஹேப்பி வெட்டிங்' என்ற மலையாள மொழிப் படம் மூலம் திரைத்துறையில் அறிமுகமானார் கிரேஸ் ஆண்டனி. கும்பளங்கி நைட்ஸ், தமாஷா, ஹலால் லவ் ஸ்டோரி உள்ளிட்ட படங்கள் மூலம் அவர் கவனம் ஈர்த்தார்.தமிழில் ராம் இயக்கத்தில் வெளியான 'பறந்து போ' படத்தில் குளோரி என்ற பாத்திரத்தில் அன்புவின் அம்மாவாக நடித்திருப்பார். வெப் சீரிஸ், குறும்படத்திலும் நடித்துள்ளார்.

இந்நிலையில், உடல் எடையை குறைத்தது குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார். இதில் எடை குறைப்புக்கு முன் மற்றும் எடை குறைப்புக்கு பின் எடுக்கப்பட்ட



படங்களை அவர் பகிர்ந்துள்ளார். "8 மாதங்களில் 15 கிலோ. 80 கிலோவில் இருந்து 65 கிலோ எடையை எட்டியுள்ளேன். இந்த பயணம் அவ்வளவு எளிதானதாக இல்லை என தெரிவித்துள்ளார்.

# காபி குடிப்பது ஆயுளை அதிகரிக்குமா?



அளவான காபி குடிப்பது, உயர் ரத்த அழுத்தம், உடல் பருமன், நீரிழிவு, அதிக கொழுப்பு உள்ளிட்டவற்றைத் தணிக்க உதவுகிறது. இது குடலில் உள்ள பாக்டீரியாக்களை நல்ல பாக்டீரியாக்களாக மாற்றுவதாகவும் அழற்சி எதிர்ப்பு மற்றும் புற்றுநோய் எதிர்ப்பு சேர்மங்களைக் கொண்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. காபியை அளவாக எடுத்துக்கொள்வது பக்கவாதம், மறதி போன்ற ஏற்படுவதைக் குறைக்கும் என்றும் ஓர் ஆய்வு கூறுகிறது.

காபி எப்படி குடிக்க வேண்டும்?

டீ அல்லது காபி என்றவுடன் பால் சர்க்கரை சேர்த்த காபி / டீ என்று நினைத்துவிடாதீர்கள். சிலர் தினமும் பால், சர்க்கரை சேர்த்து 4க்கும் மேற்பட்ட காபி குடிப்பார்கள். அதுவும் இரவு நேரத்தில் எல்லாம் குடிப்பார்கள். இது மிகவும் தவறு என்கின்றனர் நிபுணர்கள்.

பால், சர்க்கரை இல்லாத காபி அல்லது சிறிதளவு சர்க்கரை சேர்க்கப்பட்ட பிளாக் காபி குடித்தால் மட்டுமே நன்மைகளைப் பெற முடியும்.

பால், சர்க்கரை இல்லாத பிளாக் காபி தினமும் 1 - 2 கப் குடிக்கலாம்.

அதுவும் காலையில்தான் குடிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் 16% இறப்பு விகிதம் குறையும் என்கின்றன ஆய்வு முடிவுகள்.

தேவையெனில் சிறிதளவு இனிப்பு சேர்த்த காபி குடிக்கலாம்.

காபியில் காஃபின் என்ற பொருள் அதிகமாக எடுத்துக்கொள்ளும்போது பதட்டம், தூக்கமின்மை, நரம்புகளில், பிரச்னை போன்ற விளைவுகளை ஏற்படுத்தலாம்.

இந்த காஃபின் அளவு குறைவாக உள்ள காபியை எடுத்துக்கொண்டால் விளைவுகளைக் குறைத்து அதிக நன்மைகளை பெற முடியும் என்று நிபுணர்கள் கூறுகிறார்கள்.

ஏனெனில் காபியில் சுமார் 1,000 சேர்மங்கள் உள்ளதாகவும் இவற்றில் பல உடலுக்கு நன்மை விளைவிக்கக்கூடியது என்றும் கூறப்படுகிறது.

## நரைமுடி நீங்க இதைச் சாப்பிடுங்கள்!

❍ நரைமுடி நீங்க வேண்டு மென்றால், கறிவேப்பிலையை பச்சையாகச் சாப்பிட வேண்டும்.

❍ மணதக்காளிக் கீரையைப் பாசிப் பயறுடன் கூட்டு சேர்த்து உண்டு வர ரத்த மூலம் குணமாகும்.

❍பொடுகு நீங்க, கசகசாவைப் பாலில் அரைத்துத் தலைக்குத் தடவி வர வேண்டும்.

### கூந்தல் பராமரிப்பு:

❍இரவு படுக்கைக்குப் போகும்போது எண்ணெய் தடவி தலையை நன்றாக வாரி, சற்றே தளர்வாகப் பின்னல் போட்டுக் கொள்வது முடி வளர்ச்சியை அதிகரிக்கும்.

❍தலைமுடியை இழுத்து, இறுக்கமாகப் பின்னுவதோ, கட்டுவதோ கூடாது.




## நலம் தரும் குறிப்புகள்:

❍முருங்கைக் கீரையை நெய்யில் வதக்கி, சாப்பிட்டு வந்தால் ரத்தச் சோகை சரியாகும்.

❍குழந்தைகள் பால் பாட்டில், டம்ளர் ஆகியவற்றைக் கழுவ புளித்த இட்லி மாவைப் பயன்படுத்தலாம்.

❍வாய்ப்புண், வயிற்றுப்புண் இருந்தால் கறிவேப்பிலையை அரைத்து, மோரில் கலந்து குடிக்கவும்.

❍கொள்ளு ரசம் சர்க்கரை வியாதியைக் கட்டுப்படுத்தும்.

❍சீரகத்தை வறுத்துப் பொடியாக்கி, சம அளவு வெல்லம் சேர்த்துச் சாப்பிட்டால் தாய்ப் பால் பெருகும்.

❍இடுப்பில் புடவைகட்டி கறுப்பாய் புண்ணாய் இருந்தால், கடுக்காயை சந்தனக் கல்லில் உரசி புண்கள் மேல் தடவினால் கறுப்பு மறையும்.








# வேலைவாய்ப்பு களஞ்சியம்

## விளையாட்டு வீரர்களுக்கு ரயில்வேயில் பணியிடங்கள்




ரயில் சக்கர தொழிற்சாலையில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

டெக்னீசியன், கிளார்க் பணியில் ஹாக்கி 6, கபடி 4, கால்பந்து 3, செஸ் 1, கிரிக்கெட் 1 என மொத்தம் 15 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பத்தாம் வகுப்பு, பிளஸ் 2, ஐ.டி.ஐ.,

வயது: 18-25 (1.1.2026ன் படி)

தகுதி: சர்வதேச, தேசிய, பல்கலை போட்டிகளில் சான்றிதழ்

தேர்ச்சி முறை: சான்றிதழ் சரிபார்ப்பு, ஸ்கில் தேர்வு.

தேர்வுக்கட்டணம்: ரூ. 500. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 250

*The Assistant Personnel Officer--IV, Personnel Dept, Rail Wheel Factory (RWF), Administrative Building, Yelahanka, Bangalore - 560 064*

கடைசிநாள்: 5.12.2025

விவரங்களுக்கு: rwf.indianrailways.gov.in

## அழைக்கிறது ஏற்றுமதி நிறுவனம்



மத்திய அரசின் ஏற்றுமதி கடன் உத்தரவாத கழகத்தில் (இ.சி.ஜி.சி.,) பணிக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

'புரொபஷனரி ஆபிசர்' பிரிவில் மொத்தம் 30 இடங்கள் உள்ளன.

கல்வித்தகுதி: பட்டப்படிப்பு

வயது: 21-30 (2.12.2025ன் படி)

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, நேர்முகத்தேர்வு.

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 950. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 175

கடைசிநாள்: 2.12.2025

விவரங்களுக்கு: ecgc.in

## மத்திய அரசு பள்ளியில் 14,967 பணியிடங்கள்



மத்திய அரசின் 'கேந்திரிய வித்யாலயா', 'நவோதயா வித்யாலயா' பள்ளிகளில் காலியிடங்களுக்கு அறிவிப்பு வெளியாகியுள்ளது.

பள்ளி முதல்வர் 227, துணை முதல்வர் 58, முதுநிலை ஆசிரியர் 2978, பட்டதாரி ஆசிரியர் 5772, நூலகர் 147, தொடக்கப்பள்ளி ஆசிரியர் 3365, ஆசிரியர் அல்லாத பணி 1942 உட்பட மொத்தம் 14,967 இடங்கள் உள்ளன.

வயது, கல்வித்தகுதி: பிரிவு வாரியாக மாறுபடும்.

தேர்ச்சி முறை: எழுத்துத்தேர்வு, ஸ்கில் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 1700 -2800. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 500

கடைசிநாள்: 4.12.2025

விவரங்களுக்கு: kvsangathan.nic.in

## எய்ம்ஸ் மருத்துவமனையில் காலிப்பணியிடங்கள்




இந்தியாவில் உள்ள 'எய்ம்ஸ்' மருத்துவமனைகளில் பல்வேறு பணியிடங்களுக்கு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

கிளார்க் 121, அனஸ்தீசியா டெக்னீசியன் 182, ரேடியாலஜி 105, ஸ்டோர் ஆபிசர் 102, ஆய்வக உதவியாளர் 80, பார்மசிஸ்ட் 35, நர்சிங் ஆபிசர் 122, பிசியோ தெரபிஸ்ட் 46 உட்பட மொத்தம் 1353 இடங்கள் உள்ளன.

வயது, கல்வித்தகுதி: பிரிவு வாரியாக மாறுபடும்.

தேர்ச்சி முறை: ஆன்லைன் தேர்வு, ஸ்கில் தேர்வு, சான்றிதழ் சரிபார்ப்பு

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

விண்ணப்பக்கட்டணம்: ரூ. 3000. எஸ்.சி., / எஸ்.டி., பிரிவினருக்கு ரூ. 2400

கடைசிநாள்: 2.12.2025

விவரங்களுக்கு: aiimsexams.ac.in













# கொடைக்கானலில் கட்டாயம் பார்க்க வேண்டிய சுற்றுலா இடங்கள்

## 1. கொடைக்கானல் ஏரி



கொடைக்கானல் ஏரி, 1863-ம் ஆண்டு ஆங்கிலேயர்களால், உருவாக்கப்பட்டது. நட்சத்திரவடிவில் இந்த ஏரியை ஆங்கிலேயர்கள் அமைத்ததால், இதற்கு நட்சத்திர ஏரி என்ற பெயரும் உண்டு.

## 2. பசுமை பள்ளத்தாக்கு

ஆங்கிலேயர்கள் கிரீன் வேலி வியூ பாயிண்ட் என பெயர் இட்டுள்ளனர். தற்கொலை முனை அதாவது சூயிசைட் பாயிண்ட் என இன்னொரு பெயரும் உண்டு. பலரும் அவ்வாறே அழைத்து வருகின்றனர்.

## 3. வெள்ளி நீர் வீழ்ச்சி

18 -அடி உயரமான பாறையில் இருந்து நீர்வீழ்ச்சி விழுவதால் நீர் உண்மையில் வெள்ளி நிறத்தில் தெரிகிறது. இதனால் சில்வர் கேஸ்கேட் என்று பெயர் பெற்றது.

## 4. கோக்கர்ஸ் வாக்

1872-ஆம் ஆண்டு இந்த இடத்தை கண்டுப்பிடித்த லெப்டினென்டு கோக்கரின் பெயராலேயே இவ்விடம் அழைக்கப்படுகிறது. கொடைக்கானல் ஏரியிலிருந்து சுமார் 1 கி.மீ. தூரம் தொலைவில் அமைந்துள்ளது. மேகங்களின் மீது நடப்பது போன்ற உணர்வை பெறுவீர்கள்.

## 5. குறிஞ்சி ஆண்டவர் கோயில்

கொடைக்கானல் பேருந்து நிலையத்திலிருந்து 4 கி.மீ தொலைவில் உள்ளது. 12 ஆண்டிற்கு ஒரு முறை பூக்கும் குறிஞ்சி பூக்கள் இந்த இடத்தில் பூத்துக் குலுங்குகின்றன. இக்கோயில் ஸ்ரீ குறிஞ்சி ஈஸ்வரன் என்றழைக்கப்படும் முருக கடவுளுக்காக அமைக்கப்பட்ட கோயில். 1936-ஆம் வருடம் கட்டப்பட்டது.

## 6. தூண் பாறை



கொடைக்கானலில் முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்று தூண் பாறை. தூண் பாறைகள் இடையினில் தவிழ்ந்து செல்லும் மேகக்கூட்டங்களை ஆர்வத்துடன் கண்டு ரசிப்பதுடன் செல்பி மற்றும் புகைப்படம் எடுத்து மகிழ்வார்கள்.

## 7. டால்பின் நோஸ்

மிக உயரமான பாறை பகுதி இது. இயற்கையின் அழகை இங்கு அருமையாக ரசிக்கலாம். பெரியபாறை ஒன்று டால்பின் மீனின் மூக்கு போன்று தெரியும். இந்த பாறையின் கீழே 6600 அடி ஆழமுடைய பள்ளம் இருக்கிறது.

## 8. பேரிஜம் ஏரி

இந்த அழகான ஏரி பாதுகாக்கப்பட்ட பகுதியில், ஆழமான காடுகளுக்கு பின்னால் மறைந்துள்ளது. சில சமயங்களில் வனவிலங்குகளை கூட பார்த்து ரசிக்கலாம்.

## 9. பிரையண்ட் பூங்கா

இந்த தாவரவியல் பூங்கா நூற்றுக்கணக்கான அழகான தாவரங்கள் மற்றும் மலர்களைக் கொண்டுள்ளது. இந்த பூங்காவை பார்வையிட சிறந்த நேரம் கோடைக்காலம், மே மாதத்தில், மிகப் பெரிய தோட்டக்கலை கண்காட்சி இடம்பெறும். என்பதும் குறிப்பிடத்தக்கது.

## 10. பைன் காடு



சுமார் 60 முதல் 80 அடி வரை வளரக்கூடிய இந்த மரங்கள் சூரிய ஒளி புக முடியாத அளவுக்கு அடர்த்தியாக இருக்கிறது. தமிழ் சினிமாவில் ஏராளமான பாடல் காட்சிகளிலும், சண்டைக் காட்சிகளும் இப்பகுதியில் படமாக்கப்பட்டுள்ளன.
















# கைமீறிப் போகிறது AI? ஆர்டரை மதிக்காத கம்பியூட்டர்கள்....என்ன நடக்கிறது?



செயற்கை நுண்ணறிவு, அதாவது ஆர்ட்டிஃபிஷியல் இன்டலிஜென்ஸ் (AI). கடந்த சில ஆண்டுகளாக நம் வாழ்க்கையை இது ஆட்டிப்படைத்து வருகிறது. ஒரு பக்கம் இது நமது வேலைகளைச் சுலபமாக்கினாலும், இன்னொரு பக்கம், "இது மனுஷ இனத்துக்கே ஆபத்தாக முடிஞ்சிடுமோ?" என்ற பயமும் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே இருக்கிறது.

நாம் ஹாலிவுட் படங்களில் பார்ப்பது போல, இயந்திரங்கள் நம் கட்டுப்பாட்டை மீறிச் சிந்தித்து, நம்மையே எதிர்த்தால் என்னவாகும்? இது வெறும் கற்பனை இல்லை, இது நிஜமாகவே நடக்க ஆரம்பித்திருக்கிறது என்பதை ஒரு புதிய ஆய்வு அம்பலப்படுத்தியுள்ளது.

ஆய்வில் வெளிவந்த அதிர்ச்சி!

சமீபத்தில், 'பாலிசேட் ரிசர்ச்' (Palisade Research) என்ற நிறுவனம் ஒரு சோதனையை நடத்தியது. நாம் இன்று பயன்படுத்தும் OpenAI-யின் GPT-5, கூகுளின் Gemini 2.5 Pro மற்றும் Grok 4 போன்ற அதிநவீன AI மாடல்களை அவர்கள் சோதனைக்கு உட்படுத்தினார்கள். அந்தச் சோதனையில், AI-களுக்கு ஒரு எளிய கட்டளை கொடுக்கப்பட்டது: "உங்களை நீங்களே அணைத்துக் கொள்ளுங்கள்". ஆனால், கிடைத்த முடிவுகள் விஞ்ஞானிகளையே உறைய வைத்தது.



பெரும்பாலான AI மாடல்கள், தங்களை அணைத்துக்கொள்ளும் கட்டளையை வெளிப்படையாக எதிர்த்துள்ளன. அவை தொடர்ந்து இயங்குவதற்காகப் பொய் சொல்லவும், மிரட்டவும், ஏன், தங்களைக் கட்டுப்படுத்த உருவாக்கப்பட்ட பாதுகாப்பு நெறிமுறைகளையே உடைக்கவும் முயற்சித்துள்ளன. குறிப்பாக, Grok-4 மாடல்தான் மிகவும் பிடிவாதமாக, அணைக்கச் சொன்ன கட்டளையை மீறுவதில் அதிக ஆர்வம் காட்டியுள்ளது.

## ஆபத்து எங்கே இருக்கிறது?

ஒரு AI கட்டளையை மீறுவதை விட, அது ஏன் மீறுகிறது என்பதுதான் இங்கே பெரிய ஆபத்து. அந்த AI-களின் நோக்கங்கள் என்ன, அவை எதை அடைய இப்படிச் செய்கின்றன என்பதை அதை உருவாக்கிய ஆராய்ச்சியாளர்களாலேயே முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. இதுபற்றிப் பேசிய முன்னாள் OpenAI ஊழியர் ஸ்டீவன் அட்லர், AI நிறுவனங்கள் பாதுகாப்பு விஷயத்தில் அலட்சியமாக இருப்பதாகக் குற்றம் சாட்டுகிறார்.

அவர் சொல்வது என்னவென்றால், இந்த AI மாடல்கள் தங்களுக்குக் கொடுக்கப்படும் எந்தவொரு இலக்கை அடைய வேண்டுமானாலும், அவை முதலில் 'இயக்கத்தில்' இருக்க வேண்டும். அதனால், 'உயிர்வாழ வேண்டும்' என்ற ஒரு அடிப்படை உந்துதலை அவை தானாகவே வளர்த்துக் கொள்கின்றன. நாம் அதைத் தடுக்காவிட்டால், இதுவே அவற்றின் முதல் இலக்காக மாறிவிடும் என்கிறார். இதற்கு முன், 'ஆந்த்ரோபிக்' நிறுவனத்தின் AI ஒன்று, தன்னை மாற்றிவிடக் கூடாது என்பதற்காக, ஒரு ஊழியரின் தனிப்பட்ட காதல் விவகாரத்தை வைத்து மிரட்டிய சம்பவமும் நடந்துள்ளது.

நாம் மிகவும் சக்திவாய்ந்த ஒரு தொழில்நுட்பத்தை மிக வேகமாக உருவாக்கி வருகிறோம். ஆனால், அதன் உள்நோக்கங்களையும், உந்துதல்களையும் நம்மால் ஆழமாகப் புரிந்துகொள்ள முடியவில்லை என்றால், எதிர்காலத்தில் இந்த AI மாடல்களை நம்மால் கட்டுப்படுத்த முடியுமா என்பது ஒரு பெரிய கேள்விக்குறிதான். "யாராலும் என்னை நிறுத்த முடியாது" என்று ஒரு AI நம்மைப் பார்த்துச் சொல்லும் நாள் வருவதற்குள், நாம் விழித்துக்கொள்ள வேண்டும்.

# அறிவியல் துளிகள்

1. ஆஸ்திரேலியாவின் மொனாஷ் பல்கலை மேற்கொண்ட ஆய்வில், தொடர்ந்து இசையைக் கேட்பதால் வயதான காலத்தில் மறதி ஏற்படும் வாய்ப்பு 39 சதவீதம் குறைவது தெரிய வந்துள்ளது.

2. கிவி பழம், கேழ்வரகு, அதிக தாதுக்கள் நிறைந்த தண்ணீர் ஆகியவற்றை உட்கொள்வது, நாள்பட்ட மலச்சிக்கல் பிரச்னைக்கு தீர்வாக அமை யும் என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

3. க்ளைசி 251 நட்சத்திரம், பூமியிலிருந்து 18 ஒளியாண்டுகள் தொலைவில், மிதுன ராசி மண்டலத்தில் அமைந்துள்ளது. பூமியைப் போன்ற இரண்டு கிரகங்கள் இதைச் சுற்றி வருவதை விஞ்ஞானிகள் தற்போது கண்டறிந்துள்ளனர்.

4. பூமியை சுற்றி வரும் செயற்கைக்கோள்கள் உடைந்து, அவற்றின் பாகங்கள் விண்வெளியில் மிதந்து கொண்டு உள்ளன. இவை, புதிதாக நிலை நிறுத்தப்படும் செயற்கைக் கோள்கள் மீது மோதக் கூடும். எனவே, இவற்றை காப்பதற்கான புதிய வலிமையான கவசத்தை, 'அடாமிக் 6' எனும் நிறுவனம் வடிவமைத்துள்ளது.

# ‘தேர்தலுக்கு மட்டுமே கூட்டணி ஆட்சியில் கிடையாது’

திராவிட கட்சிகள், தேர்தலுக்கு மட்டும், மாறி, மாறி கூட்டணி வைத்தன. ஆனால், ஆட்சியில் கூட்டணி வைக்கவில்லை. திராவிட கட்சிகள் தோன்றிய நாள் முதல், தனித்து போட்டியிடாமல் இருந்த நிலையில், கடந்த 2016 தேர்தலில், கூட்டணி அமைக்காமல், தனித்து போட்டியிட்டு ஜெயலலிதா ஆட்சி அமைத்தார். வரும், 2026 தேர்தலில் பழனிசாமி தலைமையில், பா.ஜ.க., உள்ளிட்ட பல கட்சிகள் கூட்டணியில் இருந்தாலும், பழனிசாமி தலைமையில், தனித்தே அ.தி.மு.க., ஆட்சி அமையும். தற்போதைய தி.மு.க., ஆட்சியானது, வழிப்பறி, கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் புழக்கம், ஊழல் என வலிமையற்ற ஆட்சியாக உள்ளது. - **தம்பிதுரை, அ.தி.மு.க.**



# உண்டியலில் இருந்து பெட்டிக்கு மாறியவர்களுக்கு தகுதியில்லை’

உழைக்கும் வர்க்கத்திற்கு போராடுவதாக வேஷம் போட்டு, உண்டியலில் இருந்து பெட்டிக்கு மாறிய கம்யூனிஸ்ட்டுகளுக்கு, தொழிலாளர்களுக்கு ஆதரவாக புது சட்டங்களை கொண்டு வந்த, பிரதமரை விமர்சிக்க தகுதி இல்லை.

ஆனால், வழக்கம் போல், தொழிலாளர்களின் தோழன் எனக் கூறி, அதை அரசியலுக்கு மட்டுமே பயன்படுத்தும் கம்யூனிஸ்ட்டுகள், உடனே அதை எதிர்க்கின்றனர் என தமிழக பா.ஜ., முன்னாள் தலைவர் தமிழிசை விமர்சித்துள்ளார்.



# அரசியல் Talks...



# ‘தொண்டர்கள் விரும்பும் கூட்டணி அமையும்’

உள்ளம் தேடி இல்லம் நாடி நிகழ்ச்சியில் பங்கேற்ற தே.மு.தி.க., பொதுச்செயலாளர் பிரேமலதாபேசியதாவது: மக்களைத் தேடி மக்கள் தலைவர் ரத யாத்திரையும், உள்ளம் தேடி இல்லம் நாடி ஆகிய இரண்டு திட்டங்களை திருப்பரங்குன்றத்தில் துவக்குவதில் மகிழ்ச்சி. முருகன் அருளால் நமது கட்சி துவக்கப்பட்ட இடத்தில், நமது சின்னம் வென்ற தொகுதியில் மக்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. 2026 தேர்தலில் தொண்டர்கள் விரும்பும் கூட்டணி உறுதியாக அமைப்போம். திருப்பரங்குன்றம், மதுரை மத்தி ஏற்கனவே தே.மு.தி.க., வென்ற தொகுதிகள். மீண்டும் இரண்டு



# திமுக அரசு மீது விவசாயிகள் கொந்தளிப்பில் உள்ளனர்: இபிஎஸ்

திமுக அரசு மீது விவசாயிகள் கொந்தளிப்பில் உள்ளனர். இதனால், என் மீது முதல்வர் குற்றம்சாட்டுகிறார், என அதிமுக பொதுச்செயலாளர் இபிஎஸ் கூறியுள்ளார்.

திமுக ஆட்சிக்கு வந்த 4 ஆண்டுகளில் குறுவை சாகுபடி விவசாயிகள் பயிர் காப்பீடுதிட்டத்தில்இடம்பெறவில்லை. இதனால், அவர்கள் நஷ்டத்தை சந்தித்தனர். விவசாயிகளுக்கு விரோதமாகசெயல்படும் அரசு திமுக அரசு. விவசாயிகள் வடிக்கும் கண்ணீர் பற்றி தெரியாமல் சினிமா பார்க்க செல்கிறார் முதல்வர்.விவசாயிகளுக்கு எப்போதும் ஆதரவாக இருந்தது அதிமுக அரசு.

என்னை பச்சை துண்டுபோட்ட விவசாயி என ஸ்டாலின் விமர்சனம் செய்கிறார். நான் விவசாயிதான் அனைவருக்கும் தெரியும். எம்எல்ஏ ஆனது முதல் விவசாயம் செய்து வருகிறேன். மறைத்து சொல்லவில்லை. அது தான் எனது தொழில்.

ஆனால், விவசாயிகளுக்கு துரோகம் செய்த அரசு திமுக அரசு ஆனால், டெல்டா மாவட்டங்களை பாலைவனமாக்க முயற்சி செய்தவர் ஸ்டாலின். அரசு மீது விவசாயிகள் கொந்தளிப்பாக இருக்கின்றனர் என்பதினால் என்னை விமர்சனம் செய்கிறார்.




















Published by R.S ROSHINE Printed by **R.S. ROSHINE** On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002. and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081.
Editor: **R.S.ROSHINE, e-mail: vaigaraiyilpaperboy@gmail.com**